8.5.2024

ஊடக வெளியீடு

**IR. PATHMANATHAN K.**
தலைமை நிர்வாக அதிகாரி
PBA ஹொல்டிங் பெர்ஹாட் மற்றும் PBAPP.

**பேராக் நீர் விநியோகத்திற்கு பிரதமர் "பச்சைக் கொடிக் காட்டினார்": 51 ஆண்டுகளில் பினாங்கிற்கான சிறந்த நீர் செய்திகளில் ஒன்றாகும்**

- **பிப்ரவரி 2024 இல், பினாங்கின் நீர் பயன்பாடு 927 MLD ஆக இருந்தது. நீர் தேவை 2030-ல் 1,532 MLD ஆகவும், 2040-ல் 1,844 MLD ஆகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

- **பினாங்கில் பெரிய அளவிலான உப்புநீக்கம் அல்லது கழிவுநீரை மறுசுழற்சி செய்வதை விட பேராக்கில் இருந்து நீரை வாங்குவது விலை குறைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

பினாங்கு, புதன், 8.5.2024: பினாங்குக்கு சுத்திகரிக்கப்பட்ட நீரை பேராக் வழங்கும் என்ற பிரதமரின் அறிவிப்பு கடந்த 5 தசாப்தங்களில் "பினாங்குக்கான சிறந்த நீர் செய்திகளில்" ஒன்றாகும்.

5.5.2024 அன்று, பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம், பேராக் சுல்தானும் அம்மாநில மந்தரி பெசாரும் கெரியன் ஒருங்கிணைந்த பசுமைத் தொழில்துறை பூங்கா மூலம் பினாங்குக்கு நீர் வழங்க ஒப்புக்கொண்டதாகத் தெரிவித்தார்.

பினாங்கு தனது நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், 2030க்குள் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தைத் தூண்டுவதற்கும் இரண்டாவது பெரிய நீர் ஆதாரத்தை அவசரமாகப் பெற வேண்டும்.

பினாங்குக்கு மத்திய அரசால் செயல்படுத்தப்பட்ட கடைசி பெரிய நீர் விநியோகத் திட்டமாக மூடா நதி (சுங்கை மூடா) நீர் திட்டம் அமைகிறது. மலேசியாவின் இரண்டாவது பிரதமர் மறைந்த துன் அப்துல் ரசாக் பின் உசேன் அவர்களால் 1973 இல் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த 51 ஆண்டுகளில், பினாங்கு அதன் ஒரே மூல நீர் ஆதாரமாக சுங்கை மூடாவை மட்டுமே அதிகம் சார்ந்துள்ளது.
பேராக்-பினாங்கு நீர் திட்டம் பினாங்குக்கு பின்வரும் வழிகளில் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது:

1. **2030 ஆண்டுக்குப் பிறகும் போதுமான நீர் விநியோகம்:** பிப்ரவரி 2024 இல், பினாங்கின் நீர்ப் பயன்பாடு ஒரு நாளைக்கு 927 மில்லியன் லிட்டர் (MLD) ஆகும். நீர் தேவை 2030ல் 1,532 MLD ஆகவும், 2040-க்குள் 1,844 MLD ஆகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. PBAPP அதன் நீர் தற்செயல் திட்டம் 2030 (WCP 2030)-ஐ செயல்படுத்தி 2030 வரை போதுமான நீர் இருப்பதை உறுதி செய்கிறது. 2030 ஆண்டுக்குப் பிறகு, பினாங்குக்கு பேராக்-பினாங்கு நீர் திட்டம் மற்றும்/அல்லது பிரதான உப்புநீக்கம் மற்றும் கழிவு நீர் மறுசுழற்சி திட்டங்கள் செயல்படுத்துவது அவசியமாகும்.

2. **கூடுதலான சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை ஆதரிக்க நீர் விநியோகச் செயல்திறனை அதிகரித்தல்:** 1970களில் இருந்து பினாங்கின் அபரிமிதமான GDP வளர்ச்சி, வரம்பற்ற சமூகப் பொருளாதார ஆற்றலைக் கொண்ட மாநிலம் என்பதை நிரூபிக்கிறது. இருப்பினும், அதன் குறைந்த நிலப்பரப்பு காரணமாக, பினாங்கின் நீர் ஆதாரங்கள் குறைவாகவே உள்ளன. எனவே, அடுத்த 20 ஆண்டுகளில் பினாங்கின் முன்னேற்றத்தை வலுப்படுத்த, பேராக்-பினாங்கு நீர்த் திட்டம் போன்ற இரண்டாவது பெரிய நீர் வளத்தைப் பெற வேண்டும்.

3. **SPS இல் உள்ள நீர்ப் பயனீட்டாளர்களுக்கு நேரடி விநியோகம்:** பேராக் மாநிலத்தில் இருந்து நீர் பினாங்கு பெருநிலத்தின் தெற்குப் பகுதிக்கு பம்ப் செய்யப்படும். எனவே, பேராக்-பினாங்கு நீர்த் திட்டம் தெற்கு செபராங் பிறை (SPS) இன் சுமார் 79,956 பயனீட்டாளர்களுக்கு நீர் விநியோகத்தை மேம்படுத்தி, நிலைப்படுத்துகிறது. 2023 இல், SPS இல் நீர்ப் பயன்பாடு 182 MLD ஆக மதிப்பிடப்பட்டது. இம்மாவட்டத்தின் நீர் தேவை 2030ல் 285 MLD-ஐ எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

4. **SPU, SPT மற்றும் பினாங்கு தீவில் உள்ள மற்ற நீர்ப்**

**பயனீட்டாளர்களுக்கு அதிக நீர் அவசியம்:** பேராக்-பினாங்கு நீர் திட்டம் செயல்பாடு காணும் போது, அது நேரடியாக SPSக்கு நீர் வழங்கும். வடக்கு செபராங் பிறையில்(SPU) உள்ள சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து(WTP) SPS-க்கு PBAPP நீரை பம்ப் செய்ய வேண்டிய அவசியமில்லை. எனவே, சுங்கை டுவா WTP இலிருந்து அதிக அளவு சுத்திகரிக்கப்பட்ட நீரை SPU, SPT மாவட்டங்கள் மட்டுமின்றி பினாங்கு தீவில் உள்ள தென்மேற்கு மாவட்டம்(DBD) மற்றும் வடகிழக்கு மாவட்டம் (DTL) ஆகியவற்றில் உள்ள சுமார் 491,153 நீர்ப் பயனீட்டாளர்களுக்கு திருப்ப அனுப்பப்படலாம். எனவே, SPS தவிர மற்ற மாவட்டங்களில் உள்ள நீர்ப் பயனீட்டாளர்களும் மறைமுகமாகப் பலன்களை அனுபவிப்பார்கள்.

5. **காலநிலை மாற்ற அபாயங்களைக் குறைத்தல்**: அண்மைய ஆண்டுகளாக, பருவநிலை மாற்றம் பினாங்கின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் (WCAs) மழைப்பொழிவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. 6.5.2024 அன்று, ஆயிர் ஈத்தாம் அணையின் திறன் 37.3% ஆகவும், தெலுக் பஹாங் அணையின் திறன் 54.7% ஆகவும் இருந்தது. பேராக்கிலிருந்து SPS-க்கு நீரை பெறுவதன் மூலம், PBAPP எதிர்காலத்தில் சுங்கை டுவா WTP இலிருந்து பினாங்கு தீவுக்கு அதிக நீரைப் பாதுகாப்பாக பம்ப் செய்யலாம், இது மழையால் மட்டுமே நிரப்பப்படும் இரண்டு அணைகளின் இருப்புக்களை சிறப்பாகப் பாதுகாக்கும்.

6. **சுங்கை மூடா சம்பவங்களின் அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்கங்களைக் குறைத்தல்:** 2022 மற்றும் 2023-ஆம் ஆண்டுகளில், பினாங்கில் 465,000 நீர்ப் பயனீட்டாளர்களுக்கு நீர் விநியோகத்தை பாதித்த 3 "சுங்கை மூடா சம்பவங்கள்" (கெடாவில் ஏற்பட்டது) நிகழ்ந்தன. பேராக்கில் இருந்து நீர் விநியோகம் செய்யப்படுவதால், SPS மற்றும் SPT இல் உள்ள நீர் பயனீட்டாளர்கள் இனி சுங்கை மூடா சம்பவங்களால் பாதிக்கப்படமாட்டர். அதே நேரத்தில், PBAPP, SPU, SPT மற்றும் DBD ஆகியவற்றில் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க அதன் சுங்கை மூடா அவசரகால செயல் திட்டங்களை (ERPs) மேம்படுத்த முடியும்.

7. **குறைந்த செலவு மற்றும் மிகவும் நியாயமான எதிர்கால நீர்**

**கட்டணம்**: பினாங்கில் கடல் நீர் மற்றும்/அல்லது கழிவுநீரை மறுசுழற்சி செய்யும் திட்டங்களை மேற்கொள்வதை விட சுங்கை பேராக்கில் இருந்து சுத்திகரிக்கப்பட்ட நதி நீரை வாங்குவது குறைந்த செலவை ஏற்படுத்தும்.

இது பேராக்-பினாங்கு நீர் திட்டத்திற்கான முக்கிய சாத்தியக்கூறுகள்

சிங்கப்பூர் உப்புநீக்கம் மற்றும் நீர் மறுசுழற்சி தொழில்நுட்பங்களை உயர் மட்ட நீர் விநியோகப் பாதுகாப்பை அடைய பயன்படுத்தியுள்ளது. இருப்பினும், பினாங்கில் PBAPP வசூலிக்கும் ஒரு m3க்கு ரிம0.86 உடன் ஒப்பிடுகையில், சிங்கப்பூரின் முதல் 35m3 மாதத்திற்கு சிங்கப்பூரின் சராசரி உள்நாட்டு நீர் விகிதம் ஒரு m3க்கு ரிம9.60 (SGD2.74) ஆகும்.

பினாங்குக்கு பேராக்கில் இருந்து நீரை வாங்குவது மலிவானது மற்றும் மிகவும் சாத்தியமாகும். இதனால் PBAPP எதிர்காலத்தில் நியாயமான நீர் கட்டணத்தைத் தொடரலாம்.

இந்த 7 முக்கிய விஷயங்களை மனதில் கொண்டு, 5.5.2024 அன்று டத்தோஸ்ரீ அன்வாரின் முக்கிய அறிவிப்புக்கு PBAPP தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறது.

பேராக்-பினாங்கு நீர்த் திட்டத்தை 2030-க்குள் நனவாக்குவதற்கு பிரதமரின் சிறந்த தலைமைத்துவம் நமக்குத் தேவை.

நன்றி.

---

எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Unit
மின்னஞ்சல் : syarifah@pba.com.my